**தலைப்பு 314 – தென் மாகாண சபை– 2021**

## 1. தூரநோக்கு, பணிக்கூற்று மற்றும் செயற்பாடுகள்

### 1.1 தூரநோக்கு

மனித நேயமிக்க நிர்வாக முறையின் ஊடாக சுபீட்சமான தென் மாகாணம்

### 1.2 பணிக்கூற்று

தென் மாகாணத்தில் காணப்படும் மனித, நிதி மற்றும் பௌதீக வளங்களை முகாமைத்துவக் கோட்பாடுகளின் அடிப்படையில் செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் செயற்படுத்துவதன் ஊடாக மாகாணத்தினுள் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியை உயர் நிலைக்கு கொண்டுவருதலும் தேசிய பொருளாதாரத்திற்கு உயர்ந்த பங்களிப்பினை வழங்குதலும்.

### 1.3 பணிப்பொறுப்புக்கள்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தம் மற்றும் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகள் என்னவற்றின் பிரகாரம் கடமைகளையும் செயற்பாடுகளையும் நிறைவேற்றுதல்

## 2. கணக்குகள்

### 2.1 நிதிக்கூற்றுக்கள்

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

தென் மாகாண சபைக்காக வழங்கப்பட்ட மொத்த நிதிஏற்பாடு ரூபா 40,614 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையில் அந்த ரூபா 39,120 மில்லியன் நிதியேற்பாடும் பயன்படுத்தப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியேற்பாட்டின் பயன்பாடு தொடர்பான தகவல்கள்**

| செலவின விடயம் | தேறிய நிதிஏற்பாடு | செலவினம் | சேமிப்பு | சேமிப்பு தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | % |
| மீண்டெழும் | 36,096 | 36,096 | - | - |
| மூலதன | 4,518 | 3,024 | 1,494 | 33 |
| **மொத்தம்** | **40,614** | **39,120** | **1,494** | |

3. **கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**----------------------------------------------**

தலைப்பின் கீழ் பாராளுமன்றத்தினால் வழங்கப்பட்ட நிதிஏற்பாடுகள் மாகாண சபையினால் மாகாண சபையின் நிதியத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தது. மாகாண சபையின் நிதியம் கணக்காய்வு செய்யப்பட்டு அது தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.